பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.04.2024 முதல் 07.04.2024 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 027 (04) PJN/GKMS/2024 தேதி: 02.04.2024

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (28.03.2024 முதல் 01.04.2024 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -07.04.2024 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/03 | 29/03 | 30/03 | 31/03 | 01/04 | | நாள்-1 03/04 | நாள்-2 04/04 | நாள்-3 05/04 | நாள்-4 06/04 | நாள்-5 07/04 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 35 | 35 | 36 | 36 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 35 | 36 | 36 | 36 | 37 |
| 25 | 26 | 24 | 26 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 24 | 25 | 25 | 25 | 26 |
| 2 | 2 | 2 | 3 | 2 | மேக மூட்டம் | 4 | 3 | 1 | 3 | 3 |
| 53-87 | 57-92 | 49-93 | 61-87 | 63-90 | ஈரப்பதம் (%) | 50-90 | 50-90 | 40-90 | 50-90 | 50-90 |
| 4 | 4 | 4 | 5 | 5 | காற்றின் வேகம் (கி.மீ) | 16 | 18 | 18 | 18 | 20 |
| வடக்கு வட மேற்கு | வட கிழக்கு | மேற்கு வட மேற்கு | வடக்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | காற்றின் திசை | தெற்கு தென் கிழக்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (03.04.2024 முதல் 07.04.2024 வரை):**

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் வறண்ட வானிலையாக காணப்படும். வெப்ப நிலை 24-37 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 40-90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 16-20 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

ஏப்ரல் 07 லிருந்து 13 வரை மழை (0.41 **மி.மீ**) இயல்பை விட குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை (35.28 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.23 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| உளுந்து மற்றும் பச்சை பயிர் | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | உளுந்து பயிரில் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த லிட்டருக்கு கார்பன்டசிம் 1 கிராம் அல்லது ப்ரோப்பிகானசொல் 1 மி.லி என்ற அளவில் பயன்படுத்தவும். |
| | இலை சுருள்வு நோய் | உளுந்து மற்றும் பச்சை பயிரில் இலை சுருள்வு நோயைப் பரப்பும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீரில் 0.2 கிராம் தையாமீத்தாக்சம் (25 WG) கலந்த கரைசலை பயன்படுத்தவும். |

| | | |
|---|---|---|
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | பருத்தியில் களையைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பயிரிதியோபக் சோடியம் (pyrithiobac sodium) 62.5 கிராம் a.i. + குயிசலோபாப் ஈதைல் (quizalofop ethyl) 50 கிராம் a.i களைக்கொல்லிகளை விதைத்த 20-25 வது நாட்களில் பயன்படுத்தவும். |
| கத்தரி | இலைப் புள்ளி மற்றும் பழம் அழுகல் நோய் | கத்தரியில் இலைப்புள்ளி மற்றும் பழம் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ் (Pseudomonas fluorescens) அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் (Bacillus Subtilis) ஒரு லிட்டர் நீரில் 5 கிராம் அல்லது 5 மி.லி கலந்த கரைசலை உடனடியாக தெளிக்க வேண்டும். |
| கால்நடை | உண்ணி காய்ச்சல் | கால்நடைகளில் ஒட்டுண்ணியால் உண்ணி காய்ச்சல் நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இந்நோயைத் தடுக்க உண்ணியைக் கட்டுப்படுத்த பூட்டாக்ஸ் என்ற மருந்தை 1 லிட்டருக்கு 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும். மாடுகளை இம்மருந்து கொண்டு குளிப்பாட்டலாம். கால்நடைக் கொட்டகைக்கு அருகாமையிலுள்ள இடங்களிலும் இம்மருந்தினை தெளிக்கவேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் வறண்ட வானிலையாக காணப்படும்.

**முதல்வர்**